வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு அனைத்து முன்னேற்பாடு பணிகளும்

# துரிதமாக மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்!

## சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், அறிவுறுத்தல்!

சென்னை, அக். 6-

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், தலைமையில் நேற்று (05.10.2023) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் தெரிவித்ததாவது:

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தற்போது, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீரின் தரத்தை உறுதிசெய்வதற்காக நாளொன்றுக்கு 300 குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு குடிநீரின் தரம் ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்படுகிறது. வடகிழக்கு பருவமழை காலங்களில் குடிநீரின் மாதிரி சேகரிப்பு 600 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். குடிநீரில் குளோரின் அளவு மற்றும் அதில் கலந்துள்ள திடப்பொருள்களின் அளவை (Total Disolved Solid) பரிசோதிக்க, நாளொன்றுக்கு 2000 மாதிரிகள் என்பதை 3000 மாதிரிகளாக அதிகரிக்கப்பட்டு களப்பணியாளர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும். குறிப்பாக குடிநீரின் தரம் குறித்து பொதுமக்களிடமிருந்து குறைகள் தெரிவிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட பகுதிகளில் அதிக அளவில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்வதற்காக தினந்தோறும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

குடிநீர் விநியோக நிலையங்களுக்குத் தேவையான பிளீச்சிங்பவுடர், படிகாரம், சுண்ணாம்பு போன்ற இரசாயன பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட வேண்டும். மழைக்காலங்களில் குடிநீர் விநியோக நிலையங்களில் (WDS) தேங்கும் மழைநீரினை இறைக்க பெரிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் சிறிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் குடிநீர் விநியோக நிலையங்களில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோக நிலையங்களிலும் உள்ள இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். ஜெனரேட்டர்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பில் வைத்திருக்கப்பட வேண்டும்.

குடிநீர் விநியோக நிலையங்களிலும், கழிவுநீரிறைக்கும் நிலையங்களிலும் மணல் மூட்டைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். கழிவுநீர் அடைப்பு ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு, தூர்வாரும் இயந்திரங்கள், பெரிய ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் சிறிய ஜெட்ராடிங் இயந்திரங்கள், ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் என மொத்தமுள்ள 537 இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்களில் கழிவுநீர் அடைப்பு, கழிவுநீர் தேக்கம் மற்றும் மழைநீர் அகற்றும் பணிகளை சீர் செய்யும் வகையில் அனைத்து களப்பணியாளர்களும் 24 மணி நேரமும் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் / பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய அறிவிப்பு பலகைகள், பாதுகாப்பு தடுப்புகள் அமைப்பது பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும், கடந்த மே மாதம் முதல் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களில் மீண்டும் அடைப்பு ஏற்படாத வண்ணம் தொடர் கண்காணிப்புப் பணிகளை உறுதி செய்ய வேண்டும். அனைத்து களப்பணியாளர்களும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தயார் நிலையில் இருக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து தொலைபேசி மூலமாகவோ, நேரிடையாகவோ அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பெறக்கூடிய குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தலைமைப் பொறியாளர் ஆர். சிவமுருகன், கண்காணிப்புப் பொறியாளர்கள் எ. இராதாகிருஷ்ணன், எஸ். இரவீந்திரநாதன் மற்றும் அனைத்துப் பகுதிப் பொறியாளர்கள் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் பரிந்துரையை ஏற்று

# புற்றுநோய் சிகிச்சைக்காக சிறுவனுக்கு ரூ. 3 லட்சம் நிதி!

## சிறுவனின் குடும்பத்தினர் - வினோத் வேலாயுதம் நன்றி!

சென்னை, அக். 6 -

புற்று நோயால் உடல் நலக் குறைவு ஏற்பட்டு அடையாறு புற்று நோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவனுக்கு ரூபாய் மூன்று இலட்சம் PMNRF முலமாக மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஏற்பாடு செய்தார்

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சென்னை-24, கோடம்பாக்கம், ஈஸ்வரன் நகர் 5-வது தெரு 6 எண்ணில் வசிக்கும் ஐயப்பனின் மகன் சிவராமனுக்கு சென்னை-20, அடையாறு, காந்தி நகரில் உள்ள புற்று நோய்

மருத்துவமனையில் சிகிச்சை பெற ரூ 3 லட்சத்தை பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து பெற்று சிகிச்சை பெற தயாநிதி மாறன் எம்.பி. வழி வகை செய்தார்.

இக்கோரிக்கையினை தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து நிவாரண நிதி கிடைக்க ஆவன செய்த தயாநிதி மாறன் எம்.பி. க்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் உள்ளிட்ட சிறுவனின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்**

**பொறுப்புகளுக்கான நேர்காணல்**

**இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–4 மற்றும் மண்டலம்–5–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

சேலம் கிழக்கு, சேலம் மத்திய, சேலம் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 09.10.2023 திங்கள்கிழமையும், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு 10.10.2023 செவ்வாய்க்கிழமையும், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 11.10.2023 புதன்கிழமையும், கோவை மாநகர், கோவை தெற்கு, கோவை வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு 12.10.2023 வியாழக்கிழமையும், நீலகிரி மாவட்டக் கழகத்துக்கு 13.10.2023 வெள்ளிக்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மண்டலம்–4

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | சேலம் கிழக்கு | 09/10/2023 | காலை 9.00 மணி | ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபம், ஐந்து ரோடு, சேலம். |
| 2 | சேலம் மத்திய | 09/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 3 | சேலம் மேற்கு | 09/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 4 | நாமக்கல் கிழக்கு | 10/10/2023 | காலை 9.00 மணி | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 5 | நாமக்கல் மேற்கு | 10/10/2023 | மதியம் 2.00 மணி | கொங்கு திருமண மண்டபம், திருச்செங்கோடு |
| 6 | ஈரோடு தெற்கு | 11/10/2023 | காலை 9.00 மணி | ஸ்ரீ தங்கம் மஹால், மேட்டுக்கடை – பெருந்துறை ஆர்.எஸ்.சாலை, ஈரோடு. |
| 7 | ஈரோடு வடக்கு | 11/10/2023 | மதியம் 2.00 மணி | ஸ்ரீ கார்த்திகேயன் மஹால், காலேஜ் பிரிவு, கரட்டுப்பாளையம், கோபிசெட்டிபாளையம். |

## மண்டலம்–5

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கோவை மாநகர் | 12/10/2023 | காலை 9.00 மணி | சுகுணா மினி ஹால் காளப்பட்டி சாலை, கோவை. |
| 2 | கோவை தெற்கு | 12/10/2023 | மதியம் 11.00 மணி | |
| 3 | கோவை வடக்கு | 12/10/2023 | மதியம் 2.30 மணி | |
| 4 | நீலகிரி | 13/10/2023 | காலை 10.00 மணி | கலைஞர் அறிவாலயம், மாவட்டக் கழக அலுவலகம், உதகை. |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 05–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் தலைமை! ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - வி.இ.மதியழகன் எம்.சி. முன்னிலை!

# சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு இலக்கிய அரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இந்திரகுமாரி - வி.பி.கலைராஜன் - தமிழச்சி தங்கபாண்டியன் துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, அக். 6 -

சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஐந்தமிழ் அறிஞர் கலைஞரின் காவியங்களை ஆராயும் இலக்கிய அரங்கம் நாளை (7.10.2023 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சுகன்யா திருமண மண்டபம், நீலாங்கரையில் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன் தலைமை வகிக்கிறார்.

ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, வி.இ.மதியழகன் எம்.சி, த.விஸ்வநாதன், மு. மனோகரன், எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சு.ப.முத்துவேல், டி.எஸ். ரவிச்சந்திரன், தே.புருஷோத்தமன், ஏ.எஸ். பழனி, பு.ஜவஹர்தீன், வெங்கடேசன், என்.மாதவன், ஜி.மூர்த்தி, மா.பா.சித்ராலயம், மு.பா.நடராஜ், ந.நீலகண்டன், கே.முத்து, ஜி.விஜய கண்ணன், எம். குருசாமி, க.துரைராஜ், எஸ். முனுசாமி, சென்னை அரங்கநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஐந்தமிழ் அறிஞர் கலைஞரின் காவியங்களை ஆராயும் இலக்கிய அரங்கத்தில் முனைவர் பொற்கோ, முனைவர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் தி.ராஜ கோபாலன், கவிஞர் சி.ராஜேந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கவிஞர் சொற்கோ இரா. கருணாநிதி நெறி உரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன், கழக இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி, கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் இலக்கிய அரங்கத்தை துவக்கி வைக்கின்றனர்.

இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, க.சோமு, க.தனசேகரன், காசி முத்துமாணிக்கம், பெ.மணிமாறன், எஸ்.குணசேகரன், வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், ரத்னா லோகேஸ்வரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், துரைக பிலன், அரிமா சு. சேகர், கே.கண்ணன், மு.இராசா, நொளம்பூர் வே.ராஜன், துரைவீரமணி, ஜி. வெங்கடேசன், வி.எட்டியப்பன், அ.அரிகிருஷ்ணன், எம்.கே.ஏழுமலை, த.பஷீர், மா.அன்பரசன், எஸ்.டி.தங்கராஜ், ஆர்.பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், எம்.ஸ்ரீதரன், ச.சம்பத், உ.துரைராஜ், ப.ரவி, மின்னல் கந்தப்பன், வ.செல்வகுமார், பி.எஸ்.முருகேசன், த. விஜய பாலன், எஸ்.பொன்னுவேல், பா.அருண்குமார், சி.பரிமேலழகன், நா.மணிகண்டன், சைதை சாதிக், அடையார் சி.சுரேஷ், வே. ஆனந்தம், கழக த.ரமேஷ், வழக்கறிஞர் த.ஜெகதீசன், அஞ்சல் ராமன், ஆர்.சசிகுமார், வி.ராஜேஷ், கே. குமரேசன், நிஷா சையத், எம்.எஸ்.ஹரிபாபு, அனிஷ் நாகராஜ், எஸ்.முகேஷ், கண்ணன், கோ.பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆவடி தொகுதி நெமிலிச்சேரி

# கருணாகரசேரி பகுதியில் 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர் அக் 06;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி உட்பட்ட நெமிலிச்சேரி கருணாகரசேரி ஆகிய ஊராட்சிகளில் முதல்வரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 87 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலைகள் துவக்க விழா மற்றும் கருணாகரசேரி ஊராட்சியில் சுமார் 13.5 லட்ச ரூபாய் மதிப்பில் மேல்நிலை தண்ணீர் தொட்டி 4.35 லட்சம் மதிப்பில் உயர்மின் கோபுரம் விளக்கு அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றன.

இந் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்துகொண்டு சாலை மற்றும் பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்தார்

இதன் முன்னதாக கருணாகரசேரி அமுதம்பேடு பகுதியில் கூவம் ஆறு உள்ளது. இதனால் ராமாபுரம் வழியாக செல்வதற்காக பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு கல்லூரி மாணவர்கள் பல ஆண்டு காலமாக ஐந்து கிலோ மீட்டர் தூரம் ஆற்றைச் சுற்றி மற்றும் ஆற்றில் இறங்கி வழக்கம்போல் சென்று உள்ளனர் இந்த நிலையில் திமுக ஆட்சி வந்தவுடன் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று சுமார் 5.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்தின் இறுதிக் கட்டப் பணிகளை ஆய்வு செய்தார்

அப்போது அப்பகுதி பொதுமக்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மற்றும் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசருக்கும் நன்றினை தெரிவித்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, எஸ். ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்டாலின், காந்தி மதிநாதன், மாநகரக் கழக செயலாளர் சண் பிரகாஷ், ஒன்றிய கவுன்சிலர் நெமிலி கே.சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் நெமிலி கு.தமிழ்செல்வி, பத்மாவதி கைலாசம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அக்னி ராஜேஷ், நிர்வாகிகள் பா.கந்தன், ஒ.ஏய்.தாஸ், ஜி.பிரவீன்குமார், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## எஸ்.ஜோயல் முன்னிலை! ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 6 -

சென்னை தெற்கு மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி - ஒன்றிய அளவிலான பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் நிர்வாகிகள் கூட்டம் நாளை (7.10.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இந்நிகழ்விற்கு மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஜோயல் முன்னிலை வைக்கிறார்.

எனவே சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி - ஒன்றிய - வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் பங்கேற்பது குறித்தும் - மாநாடு பணிகள், கலைஞர் கணினி மையம் நூலகம் அமைத்தல், கலைஞர் நூற்றாண்டு முன்னிட்டு இளைஞர் அணி சார்பில் இளைஞர்களுக்கு நடைபெறும் பேச்சுப் போட்டி குறித்தும், கலைஞர் நூற்றாண்டு முன்னிட்டு இளைஞரணி சார்பில் நடைபெறும் மாரத்தான் போட்டி பணி பங்கேற்பது குறித்து, இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தெரிவித்துள்ளார்.

பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் முன்னிலையில்

# பம்மல் வடக்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கோ.காமராஜ் - பா.டில்லி சிறப்புரை! இ.பாலாஜி ஏற்பாடு!

காஞ்சிபுரம், அக். 6-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. 30வது வட்டம் 436 பாக முகவர்கள் கூட்டம் (BLA - 2) மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி ஜி.டில்லி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்லவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சிறப்புப் பிரதிநிதி பா. டில்லி, பகுதிக் கழகச் செயலாளர் த.ஜெயகுமார், பகுதிக் கழக நிர்வாகிகள் கே. சந்திரன், மு.ஸ்ரீதர் , இரா. குமரேசன், ஜி.கே.அரவிந்த், இரா.பாபுஜி ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.

வட்ட கழக செயலாளர் ஜி.பாலாஜி கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் ஜெ. ஜான்சேகர், எம்.சரவணன், சு.பாலாஜி, வி.பாக்கியலட்சுமி, டி.சகுந்தலா, என்.சங்கர், டி.கதிரவன், என்.ஜெகநாதன், கே.செல்வம், வ.இராமலிங்கம், எம்.நாகப்பன், என். சோலை மற்றும் கழக முன்னோடிகள் ஆர்.சூர்யசிம்மன் எஸ்.வெங்கடேசன், என்.பாஸ்கர், எஸ்.சுந்தர மூர்த்தி, கே.முருகன், பி. வேலாயுதம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.